தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, மாசி 5, திருவள்ளுவர் ஆண்டு–2051

2020 பிப்ரவரி 17, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்."

ஒரு செயலைச் செய்ய வேண்டும் என்று எண்ணி, எண்ணியபடி செயல் ஆற்றுவதில் உறுதியுடன் இருப்பாரானால் அவர் எண்ணியபடியே செயலில் வெற்றி அடைவார்.

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் திருமதி ஆர். சாவித்திரி அம்மாள், திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத் ஆகியோர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திருமதி ஆர். சாவித்திரி அம்மாள் அவர்கள் 3–10–2019 அன்றும், திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத் அவர்கள் 14–2–2020 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திருமதி ஆர். சாவித்திரி அம்மாள் அவர்கள் 1991–1996 ஆம் ஆண்டுகளில் முகையூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நன்கு பணியாற்றினார்கள்.

திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத் அவர்கள் 2001–2006 ஆம் ஆண்டுகளில் பத்மநாபபுரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்லமுறையில் பணியாற்றினார்கள். மேலும் 2001 முதல் 2002 வரை அமைச்சராகவும் பணியாற்றினார்கள்.

[பேரவைத் தலைவர்] [2020 பிப்ரவரி 17

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானம்

"குருதி மாவள்ளல்கோன்" திரு. பி.ஏ.கே.பி. இராஜசேகரன் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்னை, இராயபுரம், கிரேஸ் கார்டன் பகுதியைச் சேர்ந்த திரு. பி.ஏ.கே.பி. இராஜசேகரன் அவர்கள் 1–2–2020 அன்று உடல்நலக் குறைவினால் மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

மறைந்த திரு. பி.ஏ.கே.பி. இராஜசேகரன் அவர்கள் அதிக அளவில் இரத்த தானம் வழங்கி இந்திய அளவில் சாதனை படைத்ததோடு இரத்த தானம் குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்தியவர். 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு வாரியம் இவருக்கு "குருதி மாவள்ளல்கோன்" என்கிற விருது வழங்கி சிறப்பித்துள்ளது.

அன்னாரது மறைவினால் அவரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும் மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)